IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, HOSUR

**OS NO. 111/2014**

Deposition DW 1 witness for Plaintiffs / Defendant / Respondent Solemnly affirmed and sworn by Thiru. S. Chandru Grade III Bench Clerk on 07.08.2024 accordance with the provisions with the Act of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.கெம்பன்னா | Father's Name : | திரு.திம்மராயப்பா |
| Village : | | Taluk : | |
| -- | | Calling : | |
| -- | | Age : | 71 |
| பி.வா.சா. : | 1 | | |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | | |

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை **:**

**1)** எனது தந்தை திரு.திம்மராயப்பாவுடன் பிறந்தவர்கள் அவருடன் சேர்த்து நான்கு நபர்கள் ஆவர். அவர்களின் பெயர்கள் திரு.ராமையா, திரு.லட்சுமையா மற்றும் திரு.குல்லப்பா. எனது தந்தை வழித்தாத்தா பெயர் திரு.கெம்பரசப்பா ஆகும். எனது தாத்தா காலத்திலிருந்து எங்களுடைய குடும்பமானது நாகொண்டபள்ளி கிராமத்தில்தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு கோபண்ணபள்ளி, நாகொண்டபள்ளி மற்றும் முதுகானபள்ளி ஆகிய கிராமங்களில் சொத்துகள் உரிமைப்பட்டிருந்தது. அவருக்கு மொத்தம் எவ்வளவு ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட சொத்துக்கள் உரிமைப்பட்டிருந்தது என்று எனக்கு சரியாகத் தெரியாது. நாகொண்டபள்ளி கிராமத்தில் எனது தாத்தாவிற்கு வீடு மற்றும் நிலம் உரிமைப்பட்டிருந்தது.

2) அவருக்கு உரிமைப்பட்டிருந்த சொத்துக்கள் அனைத்தும் பாகம் பிரிக்கப்பட்டு பாகதாரர்களின் தனிப்பட்ட சுவாதீன அனுபவத்தில்தான் தற்போது உள்ளது. மேற்படி சொத்துக்களில் சிலவற்றை நாங்கள் கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. சுமார் 60-70 வருடங்களுக்கு முன்பு எனது தந்தை மற்றும் அவருடன் பிறந்தவர்களுக்கிடையே பாகம் பிரிக்கப்பட்டது என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது. பாகம் பிரிக்கப்பட்ட பிறகு வருவாய் அதிகாரிகள் வருவாய் ஆவணங்களை பெயர்மாற்றம் செய்துதர மறுத்த காரணத்தினால், மேற்படி பாகப்பிரிவினை குறித்து பஞ்சாயத்து முச்சலிக்காவானது ஏற்படுத்தப்பட்டது என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது. எனது தந்தை திரு.திம்மராயப்பாவிற்கு எழுத படிக்கத் தெரியாது, அவருக்கு கையெழுத்திட தெரியாது. எனது தந்தை திரு.திம்மராயப்பா தனிப்பட்ட முறையில் சொத்துக்கள் ஏதும் கிரையம் பெறவில்லை.

3) எனது தந்தையின் கைரேகையையோ அல்லது கையெழுத்தையோ நான் பார்த்தது கிடையாது. ஆகவே எனது தந்தை கையெழுத்திடுவாரா அல்லது கைரேகை இடுவாரா என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். திரு.ராமைய்யா, திரு.குல்லப்பா மற்றும் திரு.லட்சுமைய்யா ஆகிய என் தந்தையுடன் பிறந்த நபர்கள் பள்ளிப்படிப்பு படித்துள்ளனரா என்று எனக்குத் தெரியாது, அவர்களுக்கு கையெழுத்திடத் தெரியுமா என்று எனக்குத் தெரியாது. கடந்த 29.09.1958 தேதியன்று எனது தாத்தாவிற்கு உரிமைப்பட்ட நிலங்களை எனது தந்தை மற்றும் அவரது சகோதரர்கள் பாகம் பிரித்து அனுபவித்து வந்தனர் என்றாலும், அது குறித்து அவர்கள் பிற்காலத்தில் பஞ்சாயத்து முச்சலிக்கா ஏற்படுத்திக்கொண்டனர் என்றாலும் அது குறித்து எனக்குத் தெரியாது.

4) எனது தாத்தாவிற்கு கோபண்ணபள்ளி, முதுகானபள்ளி மற்றும் நாகொண்டபள்ளி ஆகிய கிராமங்களில் உரிமைப்பட்டிருந்த அனைத்து நிலங்களையும் எனது தந்தை மற்றும் அவருடைய சகோதரர்கள் பாகம் பிரித்துக்கொண்டு, பிற்காலத்தில் அது குறித்து பஞ்சாயத்து முச்சலிக்கா ஏற்படுத்தி அதில் அவர்கள் கையெழுத்து செய்தனர் என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது, எனது தந்தை கையெழுத்திடமாட்டார். என்னிடம் காட்டப்படும் பஞ்சாயத்து முச்சலிக்காவில் எனத தந்தை தமிழ் மொழியிலும், திரு.ராமைய்யா ஆங்கில மொழியிலும், திரு.குல்லப்பா மற்றும் திரு.லட்சுமைய்யா ஆகியோர்கள் தெலுங்கு மொழியிலும் கையெழுத்து செய்துள்ளனர் என்றால்

சரியல்ல, மேற்படி ஆவணம் குறித்து எனக்குத் தெரியாது.

5) மேற்படி பஞ்சாயத்து முச்சலிக்காவில் சாட்சிகளும் கையெழுத்திட்டுள்ளனர் என்றாலும், ஆகவே அவர்களுடைய முன்னிலையில்தான் மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றாலும் அது குறித்து எனக்குத் தெரியாது. முதுகானபள்ளி கிராம புல எண்.1/3-ல் உள்ள சொத்தானது எனது தாத்தாவிற்கு உரிமைப்பட்ட சொத்து என்றால், அரசால் வழங்கப்பட்ட சொத்தாகும், அதன் புல எண்.1/3 அல்லது 1/5 என்று எனக்கு சரியாகத் தெரியாது. எனது தாத்தாவிற்கு உரிமைப்பட்ட சொத்தாக கோபண்ணபள்ளி கிராம புல எண்.540/12ஏ மற்றும் 540/1ஏ ஆகிய சொத்துக்கள் உள்ளது என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது. மேற்படி புல எண்கள். 1/3, 540/12ஏ மற்றும் 540/1ஏ ஆகிய சொத்துக்கள் அடுத்தடுத்து உள்ளது என்றால் சரிதான், மேற்படி சொத்துக்கள் மூன்று கிராமங்களின் எல்கைகளில் உள்ளது.

6) எனது தாத்தாவிற்கு உரிமைப்பட்ட வீடானது நாகொண்டபள்ளியில் உள்ளது என்றால் சரியல்ல, ஜீஊரில் தான் அவருக்கு உரிமைப்பட்ட வீடு இருந்தது. நான் பிறப்பதற்கு முன்பே எனது தாத்தா மற்றும் அவருடைய பிள்ளைகள் நாகொண்டபள்ளி கிராமத்திற்கு குடிபெயர்ந்து வந்தனர், ஆகவே அவ்விவரங்கள் எனக்குத் தெரியாது. எனது தாத்தாவிற்கு உரிமைப்பட்ட வீடானது தற்போது நான்கு வீடுகளாக உள்ளது என்றாலும், அதன் வடக்குப்பக்கம் ரோடாகவும், தெற்குப்பக்கம் வீடுகள் அமைந்து, அதில் எனது தந்தை மற்றும் அவரது சகோதரர்கள் வசித்து வந்தனரா என்றால் அச்சமயத்தில் எனது தாத்தாவினை பார்க்காத காரணத்தினால், அவர் எந்த வீட்டில் வசித்து வந்தார் என்று எனக்குத் தெரியாது. நாகொண்டபள்ளி கிராமத்தில் உள்ள சாலைக்கு தெற்குப்பக்கம் உள்ள வீட்டில்தான் திரு.திம்மராயப்பா, திரு.குல்லப்பா, திரு.லட்சுமைய்யா மற்றும் திரு.ராமைய்யா ஆகியோர் மற்றும் அவர்களுடைய வாரிசுகள் வசித்து வந்தனர் என்றால், சரியல்ல, வேவ்வேறு வீடுகளில் வசித்து வந்தனர், அவர்களில் இருவர் திரு.திம்மராயப்பா மற்றும் திரு.ராமைய்யா ஆகியோர் மட்டும் மேற்படி வீட்டில் வசித்து வந்தனர். நாகொண்டபள்ளியில் இருந்த வீட்டில் தெற்குப்பக்கம் திரு.குல்லப்பாவும் வடக்குப்பக்கம் உள்ள வீட்டில் திரு.லட்சுமைய்யாவும் வசித்து வந்தனர். மேற்படி வீடுகள் ஆதியில் எனது தாத்தாவிற்கு உரிமைப்பட்டிருந்ததா என்று எனக்குத் தெரியாது.

**7)** பாதைக்கு தெற்குப்பக்கம் உள்ள வீடுகளைத்தான் 1958ம் ஆண்டு எனது தந்தை மற்றும் அவருடைய சகோதரர்கள் பாகம் பிரித்துக்கொண்டனர் என்றாலும், அது குறித்துதான் பஞ்சாயத்து முச்சலிக்கா ஏற்படுத்தியுள்ளனர் என்றாலும், அது குறித்து எனக்குத் தெரியாது, மேற்படி பாகப்பிரிவினை ஏற்படுத்திய சமயத்தில் நான் பிறக்காத காரணத்தினால் அது குறித்து எனக்குத் தெரியாது. மேற்படி வீட்டில் கிழக்குபக்கம் உள்ள வீடு மற்றும் காலி நிலம் திரு.ராமைய்யாவின் பாகத்திற்கு வழங்கப்பட்டது என்றாலும், அதனை நான் கிரையம் பெற்றுக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. திரு.ராமைய்யாவிற்கு பாகமாக வழங்கப்பட்ட வீட்டிற்கு மேற்குப்பக்கம் உள்ள வீடு மற்றும் நிலம் திரு.லட்சுமைய்யாவிற்கு பாகமாக வழங்கப்பட்டது என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது. மேற்படி நிலத்தினை திரு.லட்சுமைய்யாவிடமிருந்து எனது சகோதரி திருமதி.காந்தம்மாள் கிரையம் பெற்றுக் கொண்டார் என்றால் சரியல்ல. திரு.லட்சுமைய்யாவிற்கு பாகமாக வழங்கப்பட்ட வீட்டிற்கு மேற்குப்பக்க வீடுதான் எனது தந்தை திரு.திம்மராயப்பாவிற்கு பாகமாக வழங்கப்பட்ட வீடு என்றால் சரியல்ல, திரு.லட்சுமைய்யாவிற்கு உரிமைப்பட்ட வீடானது மேற்படி நிலத்தை விட்டு வெகு தூரத்தில்தான் உள்ளது.

8) எனது தந்தைக்கு பாகமாக வழங்கப்பட்ட வீட்டிற்கு மேற்குப்பக்கம் உள்ள 6 அங்குல வீடு மற்றும் 2 சென்ட் நிலம் திரு.குல்லப்பாவிற்கு பாகமாக வழங்கப்பட்டது என்றால் சரியல்ல, மேற்படி நிலத்தில் எனது தந்தை மாட்டுக்கொட்டகை அமைத்திருந்தார். திரு.குல்லப்பாவின் மனைவி பெயர் திருமதி.சாக்கம்மா ஆகும். நாகொண்டபள்ளி கிராமத்தில்தான் திரு.குல்லப்பா இறந்தார் என்றால் சரிதான், மேற்படி வீடுகளுக்கு தெற்குப்பக்கம் உள்ள வீட்டில்தான் அவர் வசித்து, அவர் காலம் சென்றார். மேற்படி விவரத்தை தவறாக தெரிவிக்கிறேன் என்றாலும், மேற்படி வீடுகளில் திரு.குல்லப்பாவிற்கு பாகமாக வீட்டில்தான் அவர் வசித்து வந்தார் என்றாலும், அங்குதான் அவர் இறந்தார் என்றாலும், அவரது இறப்பிற்கு பிறகு அவருடைய மனைவி திருமதி.சாக்கம்மா அதே வீட்டில்தான் வசித்து வந்தார் என்றாலும், அந்த விலாசத்தைக் கொடுத்துதான் முதியோர் ஓய்வூதியம் பெற்று வந்தார் என்றாலும் சரியல்ல.

9) மேற்படி வீடுகளுக்கு தெற்குப்பக்கம் உள்ள நிலமானது இவ்வழக்கு 1ம் வாதிக்கு தமிழக அரசால் ஆதி திராவிடர் நலத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காலனி நிலம் என்றால் சரியல்ல, 1ம்

வாதியின் தந்தை அச்சமயத்தில் தோட்டியாக பணிபுரிந்து வந்த காரணத்தினால் அந்நிலத்தை எடுத்து வீடு கட்டியுள்ளார். மேற்படி வீடானது 1ம் வாதிக்கு வழங்கப்பட்டு, அதில்தான் அவர் வீடு கட்டியுள்ளார் என்றாலும், ஆகவே மேற்படி வீட்டை திரு.குல்லப்பா கட்டவில்லையென்றாலும் சரியல்ல. வழக்குப்பட்டிகை சொத்துகளுக்கு தெற்குப்பக்கம் திரு.குல்லப்பாவிற்கு உரிமைப்பட்ட சொத்துக்கள் ஏதும் இல்லையென்றால் சரியல்ல. திரு.குல்லப்பாவின் இறப்பிற்குப் பிறகு, நான் அவருடைய சகோதரரின் மகன் என்ற அடிப்படையில் என்னை மேற்படி வீட்டின் சுவாதீனத்தில் இருக்க அனுமதி வழங்கியிருந்தனர் என்றாலும், அதனடிப்படையில்தான் நான் அதன் சுவாதீனத்தில் இருந்தேன் என்றாலும் சரியல்ல.

10) மேற்படி குல்லப்பாவின் வாரிசுகளுக்கு தெரிவிக்காமல் எனது பெயரில் அச்சொத்து குறித்து நத்தம் பட்டா பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. மேற்படி பட்டாவினை பெயர் மாற்றம் செய்து கொண்ட சமயத்தில் நான் 1ம் வாதிக்கு தெரிவிக்கவில்லையென்றால் சரிதான், எனது தந்தைக்கு உரிமைப்பட்ட சொத்து குறித்து மேற்படி பட்டாவினை பெயர்மாற்றம் செய்து கொண்ட காரணத்தினால், அவருக்கு தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. மேற்படி வீட்டிற்கு தெற்குப்பக்கம் உள்ள 2 சென்ட் நிலத்தில் 2013ம் ஆண்டு இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வீடு கட்டுவதற்கு வேண்டி அடித்தளம் அமைத்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி கட்டுமானங்கள் கட்ட ஆரம்பித்தபோதுதான் அது குறித்து வாதிகள் என்னிடம் விசாரித்து, அச்சமயத்தில்தான் எனது பெயரில் மேற்படி சொத்து குறித்து நத்தம் பட்டா பெற்ற விவரம் அவர்களுக்கு தெரிய வந்தது என்றால் சரியல்ல, என்னிடம் யாரும் அது குறித்து கேட்கவில்லை.

11) வாதிகள் எனக்கு கடந்த 28.07.2014ம் தேதியன்று எனக்கு அறிவிப்பு அனுப்பியிருந்தனர் என்றால் சரிதான், வழக்கறிவிப்பு வந்தது. மேற்படி அறிவிப்பில் என்னிடம் மேற்படி பட்டாவினை ரத்து செய்து, அச்சொத்திற்குரிய சுவாதீனத்தை ஒரு வார காலத்திற்குள் வாதிகளிடம் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது. மேற்படி அறிவிப்பிற்கு பொய்யான விவரங்களைக் கூறி பதில் அறிவிப்பு அனுப்பியிருந்தேன் என்றாலும், அதனை மறைத்து தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

வேண்டுகோளுக்கு இணங்க வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்/-வ.அகவிதன்)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றைவியல்
நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்.